வலயக்கல்வி அலுவலகம் - வரமராட்சி
க.பொ.த உயர்தரம் 2020
தரம் -13 நேரம் :- 3.00 மணித்தியாலம்

**ஐரோப்பா வரலாறு 25.BT.II.**

**முதலாம் வினா உட்பட பகுதி B, பகுதி C ஆகியவற்றில் இருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடையெழுதுக.**

## பகுதி A

01) உமக்கு வழங்கப்பட்ட புறஉருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயர் இடுக.

I. லிஸ்பன் II. மான்செஸ்ரர் III. வியன்னா IV. வெனிஸ்
V. றைன்நதி VI. போ நதி VII. ஏஜியன் கடல் VIII. பொல்டிக் கடல்
IX. வெல்ஜியம் X. போலந்து XI. பிரனீஸ் மலை. XII. கோசிக்கா

(12 புள்ளிகள்)

## பகுதி B

02) மேல்வரும் துறைகளில் பண்டைய கிரேக்கர் ஈட்டிய சாதனைகளை பரிசீலனை செய்க.

I. சமயம் II. இலக்கியம் III. மெய்யியல்

(16 புள்ளிகள்)

03) I. மேற்கு ஐரோப்பாவிலே மானிய முறைமை ஏற்பட்டமைக்கான காரணிகளை சுருக்கமாக ஆராய்க.

II. அரசியல், சமூகம், பொருளாதாரம் என்ற வகையில் மானிய முறையின் இயல்புகளை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

04) கைத்தொழில் புரட்சி 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இங்கிலாந்தில் நீண்டகாலம் நிலைபெறக்கூடிய பொருளாதார தொழில் நுட்ப சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது.

I. கைத்தொழில் புரட்சி முதலில் ஏற்பட்ட துறைகளைக் குறிப்பிடுக.

II. கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவிலே முதன்முதலாக இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

III. தொழில் புரட்சியின் வாயிலாக போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக குறிப்பிடுக.

IV. கைத்தொழில் புரட்சியின் விளைவுகளின் அடிப்படையில் மேற்குறித்த குறிப்பினை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

VadaZICTEC

5) மேல்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று குறிப்புரை எழுதுக.

I. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி .

II. புராதன இஸ்லாமிய நாகரீக வளர்ச்சி.

III. முப்பதாண்டுப் போர்.

IV. எதிர்மத சீர்திருத்தம்.

(16 புள்ளிகள்)

## பகுதி C

06) “பிஸ்மார்க் “போரும் இரும்பும்” எனும் கொள்கையின் மூலமாக ஜேர்மனியை ஒன்றுபடுத்தினார்” ஜேர்மனி ஒன்றினைக்கப்பட்டமையின் பிரதான கட்டங்களை ஆராய்க.

(16 புள்ளிகள்)

07) நெப்போலியன் பொனாபட் ஐரோப்பாவில் தலைசிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவனாவான்.

I. நெப்போலியன் பொனாபட் பிறந்த இடத்தைக் குறிப்பிடுக.

II. பிரான்சில் சக்கரவர்த்தி ஆவதற்கு முன்னர் நெப்போலியன் மேற்கொண்ட படையெடுப்புக்கள் எவை.

III. நெப்போலியன் பிரான்சில் சக்கரவர்த்தியாகும்வரை அவனது வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக எழுதுக.

IV. நெப்போலியன் மேற்கொண்ட உள்நாட்டுக் கொள்கையை நுணுக்கமாக பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

08) “ஐரோப்பா இரண்டு பகைமையுடைய அணிகளாகப் பிரிந்தமையே 1ம் உலகப்போருக்கு ஏதுவான காரணமாகும்.

I. 1ம் உலப்போர் நடைபெற்ற போது ஜேர்மனியில் சக்கரவர்த்தியாக இருந்தவர் யார்?

II. 1ம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்கா பங்கு பெறக் காரணம் யாது?

III. 1ம் உலகப்போர் ஏற்பட ஏதுவான காரணங்களை ஆராய்க.

IV. 1ம் உலகப்போரினால் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(16 புள்ளிகள்)

09)மேல்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்புரை எழுதுக.

I. சர்வதேச சங்கம்.

II. வியன்னா மாநாடு

III. பாசிச வாதம்.

IV. அணிசேரா அமைப்பு.

(16 புள்ளிகள்)

வலயக்கல்வி அலுவலகம் - வரமராட்சி
க.பொ.த உயர்தரம் 2020
தரம் -13 நேரம் :- 3.00 மணித்தியாலம்

**ஐரோப்பிய வரலாறு 25.B.T.I.**

**பகுதி I**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை அடைப்பினுள் இடுக.**

**இலக்கம் 1 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது உள்ளது. அப்பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

1) 1. பிரனீஸ் 2. அல்ப்ஸ் 3. அப்பினயின் 4. கோகஸஸ் 5. அப்பலாட்சியன் ( )

2) 1. ரைவர் 2. டன்யூன் 3. பிரைன் 4. யூரல் 5. விஸ்ரியூலா ( )

3) 1. ஹீனர் 2. அஸ்ரெக்கர் 3. மாயர் 4. இன்காவர் 5. பியூப்பொஸ் ( )

4) 1. ஈஸ்கிலஸ் 2. சொபோகாலீஸ் 3. யுரிபிடிஸ் 4. அரிஸ்டோபனீஸ் 5. வேர்ஜில் ( )

5) 1. பொலஞ்ஞோ 2. பாரிஸ் 3. ஒக்ஸ்போர்ட் 4. அபெலார்டி 5. கேம்பிரிட்ஜ் ( )

6) 1. கஸ்ரீல் 2. அரகன் 3. நோமண்டி 4. கிரனடா 5. நவார் ( )

7) 1. மாட்டின்லூதர் 2. பெரசல்ஸ் 3. ஜோன்கல்வின் 4. உல்ரிச்சுவிங்ளி 5. ஜோன்ஹஸ் ( )

8) 1. ஹென்ரி டர்பி 2. ஹென்ரி கோட் 3. மைக்கல் சர்வேட்ஸ்
4. ஹென்ரி பேஸ்மர் 5. வில்லியம் சீமன்ஸ் ( )

9) 1. லொயிட் ஜோர்ஸ் 2. ஒலண்டோ 3. கிளமென்சோ
4. வுட்ரோ வில்சன் 5. வின்ஸ்டன் சேர்ச்சில் ( )

10) 1. ஐக்கியஅமெரிக்கா 2. இஸ்ரேல் 3. கிழக்குஜேர்மனி
4. மேற்கு ஜேர்மனி 5. பிரித்தானியா ( )

VadaZICTEC

*** 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப்பெயர்கள் தரப்பட்டுள்ளன அவற்றில் ஒரு சோடியில் உள்ள பெயர்கள் பொருந்தாது உள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

11) 1. செயஸ் - யூபிற்றர்
2. அதினா - மினெர்வ
3. அப்பலோ - ஆர்.டி.மிஸ்
4. அப்ரோடைட் - வீனஸ்
5. பொசைடன் - நெப்தியூன் ( )

12) 1. சொபோரஸா - மிலான்
2. மெடிஸி - புளோரன்ஸ்
3. எஸ்தே - பெரரா
4. வலோயி - நெபிள்ஸ்
5. கொன்சாகா - மந்துவா ( )

13) 1. லொலாட்ஸ் - இங்கிலாந்து
2. ஹசயிற்றுகள் - பொஹீமியா
3. ஹல்வினிச் வாகிகள் - கிரேக்கம்
4. அனாபப்ற்றிஸ் - ஜேர்மனி
5. ஹியூஹனோற்ஸ் - பிரான்ஸ் ( )

14) 1. டிரிக்விலீ - நோர்வே
2. டேக் ஹமர்ஷல்- சுவீடன்
3. யூதான்ட் - தாய்லாந்து
4. குர்ட் வோல்டஹயிம் - ஆஸ்திரியா
5. பேரேஸ் டி குவேலார் - பேரு ( )

15) 1. யூக்கோசிலாவியா - மார்ஸல் டிட்டோ
2. எகிப்து - அப்துல் ஹமால் நஷார்
3. இந்தியா - ஜவகர்லால் நேரு
4. இந்தோனேசியா - ஹோசினின்
5. ரஷ்யா - நிகிதாகுருஷேவ் ( )

VadaZICTEC

*** இலக்கம் 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் X,Y நிரல்களாக தரப்பட்டுள்ளன அவற்றின் பொருத்தமான சேர்மானத்திற்கு ஏற்ப சரியான விடை இலக்கத்தை எழுதுக.**

16) X — Y

1. பிரான்சிஸ்கோ பிசாரோ — A .அமெரிக்காக்கண்டம்
2. பர்னன்டோ கோடெஸ் — B. குவிபெக்
3. சம்ப்லேன் மாக்விடே — C. மெக்சிகோ
4. அமெரிக்கோ வெஸ்புசி — D. ஆபிரிக்காவின் தென்முனை
5. பர்த்தலோமியு டயஸ் — E. பேரு தேசம்

1. ACDEB 2. BADEC 3. ECBAD 4. EBCAD 5. BDACE ( )

17) X — Y

1. மகாபட்டயத்தில் கைச்சாத்திடல் — A. முதலாம் சார்ள்ஸ் மன்னன்
2. பாராளுமன்றத்தின் தந்தை — B. இரண்டாம் ஜேம்ஸ் மன்னன்
3. தியுடர் வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன் — C. முதலாம் எட்வர்ட் மன்னன்
4. ஒலிவா் குறோம் வெலினால் கொலை செய்யப்பட்ட இங்கிலாந்தின் மன்னன். — D. மூன்றாம் ஜோன் மன்னன்
5. மகோன்னத புரட்சியின் போது இங்கிலாந்தின் மன்னன் — E. ஏழாம் ஹென்றி மன்னன்

1. DABCE 2. ACBED 3. CEABD 4. EABDC 5.DCEAB ( )

18) <u>X</u> — <u>Y</u>

மெட்டனிக் — A. லிபரல் சீர்திருத்தத்தைத் செயற்படுத்துதல்
பிஸ்மார்க் — B. தென் இத்தாலியைக் கைப்பற்றுதல்
ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் — C. ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடிசூடுதல்
கரிபால்டி — D. இரத்தமும் இரும்பும் கொள்கை
விக்டர் இம்மானுவேல் — E. லிபரல் கருத்துக்களைக் கட்டுப்படுத்துதல்

1. EDABC 2. ACDBE 3. DECBA 4. ADBCE 5. EABDC ( )

19) **X** — **Y**

யுகோஸ்லேவியா — A. வோர்சோ
செக்கொஸ்லவேக்சியா — B. புக்கரெஸ்ட்
போலாந்து — C. பெல்கிரேட்
ருமேனியா — D. சேர்பியா
பல்கேரியா — E. பிராக்

1. BACDE 2. EDCBA 3. CEABD 4. DECAB 5. EDACB ( )

VadaZICTEC

20) **X** **Y**

| X | Y |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | A. பிடெல் கஸ்திரோ |
| வியட்னாம் | B. பொரிஸ் யெல்ட்சின் |
| கம்பூச்சியா | C. ஹோ சி மின் |
| ரஷ்யா | D. ட்றூமன் |
| கியூபா | E. சிஹானுக் இளவரசன் |

1. BAEDC 2. ABCDE 3. BCDEA 4. CDBAE 5. DCEBA ( )

*** 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுள் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன அதில் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாது உள்ளது அவ்விலக்கத்தை தெரிவுசெய்து எழுதுக.**

21) முப்பதாண்டுப் போருடன் தொடர்பற்ற விடயம்.
1. ஒக்ஸ்பேர்க் உடன்படிக்கையின் குறைபாடு.
2. போரில் பிரான்ஸ் வெற்றி பெற்றமை.
3. புனித உரோமப் பேரரசு தோல்வியுற்றமை.
4. வெஸ்ற்பாலியா சமாதான உடன்படிக்கையுடன் சமயப் போர்கள் முடிவுற்றமை.
5. பேரரசன் சாள்ஸ் போரில் ஈடுபட்டமை . ( )

22) பிரான்சியப் புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள்
1. தேசிய பொதுச்சபை நிறுவப்பட்டமை.
2. கூட்டாட்சி நிறுவப்பட்டமை.
3. பதின்மூன்றாம் லூயி மன்னனின் கீழ் பிரான்சின் முடியாட்சி மீளமைக்கப்பட்டமை.
4. பயங்கர ஆட்சி.
5. அதிகாரசபை ஆட்சிக்கு வருதல். ( )

23) ஐரோப்பிய மகாநாட்டு முறைமையின் கீழ் கூட்டப்பட்ட சம்மேளனங்கள்.
1. ஐலாசபேல் 2. டிரபோவ் 3. லயிபேக் 4. பர்ளின் 5. வெரோனர் ( )

24) ரஷ்யாவை ஆட்சி செய்த மன்னர்கள்.
1. முதலாம் அலெக்சாண்டர் சார் மன்னன்.
2. இரண்டாம் அலக்சாண்டர் சார் மன்னன்.
3. மகா பீற்றர் மன்னன்.
4. ஏழாம் ஹென்ரி மன்னன்.
5. முதலாம் நிக்கலஸ் மன்னன். ( )

25) ஐக்கிய நாடுகள் சபை.
1. இரண்டாம் உலகப் போரின் பின்னர் தோற்றுவிக்கப்பட்டது.
2. அதன் பிரதான நோக்கம் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
3. பொதுச் செயலாளர் அதன் பிரதான நிர்வாகியாவார்.
4. பாதுகாப்புச் சபையின் அனைத்து அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும்.
5. நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு இரத்து அதிகாரமுண்டு. ( )

*** 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் A,B,C,D எனும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும் சரியான விடையை அல்லது விடைகளை தெரிவுசெய்து எழுதுக.**

A யும் B யும் மட்டும் சரியாயின் - 1 எனவும்

B யும் C யும் மட்டும் சரியாயின் - 2 எனவும்,

C யும் D யும் மட்டும் சரியாயின் - 3 எனவும்

A யும் C யும் மட்டும் சரியாயின் - 4 எனவும்

ஒரு விடை அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடை சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26) மேலே குறிப்பிட்டோரில் உரோமச்சக்கரவர்த்திகள் யாவர்?

A. பைதகோரஸ் B. வேர்ஜில் C. நீரோ D. மார்க்கஸ் அவுரேலியஸ் ( )

27) மேல் வருவனவற்றுள் சமய சீர்திருத்தம் ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள்?

A. திருச்சபையில் உள்ள சீர்கேடுகள்

B. பாவமன்னிப்பு பத்திரம் விற்பனை தொடர்பான கருத்து வேறுபாடு.

C. கிறிஸ்தவ மஷநெறி இயக்கத்தின் தொடக்கம்.

D. ஒக்ஸ்பேர்க் சமாதானத்தில் ஏற்பட்ட தீர்மானங்கள். ( )

28) மேல்வருனவற்றில் மானிய முறையின் இயல்புகள் யாவை?

A. பலமான மத்திய அரசாங்கம்.

B. பிரபுக்கள் வர்க்கம்.

C. அடிமைகள் வர்க்கம்.

D. பலம்கொண்ட நிலையான படை. ( )

29) மேல்வருவனவற்றுள் ஒரு நவீனகால அரசுகளின் அமைப்பு முறையின் அம்சங்கள்?

A. எல்லா நாடுகளிலும் சுதந்திரமும் சட்ட ரீதியிலான சமத்துவமும்.

B. ஒவ்வொரு நாடும் தனக்குரிய அயல்நாட்டுக் கொள்கையை கடைப்பிடிக்கும் உரிமை.

C. போருக்குப் பதிலாக இராஜதந்திரத்தைப் பயன்படுத்தல்.

D. போரினைத் தடுப்பதற்கு சமபல நிலையை ஒரு வழியாகக் கையாளுதல். ( )

30) பின்வருவனவற்றுள் இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்த காரணங்கள் யாவை?

A. ஜேர்மனியில் நாசிசத்தின் எழுச்சி.

B. ரஷ்யா இத்தாலி என்பவற்றுக்கு இடையிலான காலணித்துவப் போட்டி.

C. சர்வதேச சங்கம் தோல்வியுற்றமை.

D. ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனிக்கு ஆதரவு புரிந்தமை. ( )

**31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அடைப்புக்கோட்டில் எழுதுக**

31) உரோமர் கால எழுத்தாளர் யார்?

1. தியூசீடிஸ் 2. அரிஸ்டோபனிஸ் 3. ஹோமர் 4. வேரிஜில்5. பின்டார் ( )

32) பாப்பரசரின் பாரம்பரிய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

1. அவிஞ்ஞொ 2. லண்டன் 3. மாசெல்ஸ் 4. ஜெனோவா 5. உரோம் ( )

33) பாராளுமன்றத்திற்கும் மன்னனுக்கும் இடம்பெற்ற போரில் பாராளுமன்ற படைகளுக்கு தலைமைதாங்கியவன் யார்?

1. 1ம் ஜோன் 2. 8ம் ஹென்றி 3. 1ம் சாள்ஸ்
4. ஒலிவர் குரோம்வெல் 5. 3ம் ஹென்றி ( )

34) கோள்கள் சூரியனை நீள்வட்டப் பதையில் வலம் வருகின்றமை பற்றி குறிப்பிட்ட விஞ்ஞானி யார்?

1. தொலமி 2. நிக்களஸ் கொப்பனிக்கஸ் 3. கலியியோ கலிலி
4. ஐசார்க் நியூட்டன் 5. ஜோகனஸ் கெப்ளர் ( )

35) அமெரிக்க சுதந்திரப் போருக்கு தலைமை வகித்தவர் யார்?

1. ஜோர்ச் வோசின்டன் 2. லிங்கன் 3. மொன்றோ
4. ஜெபர்சன் 5. ஜக்சன் ( )

*** 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளது ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் கோடிகளுக்குக் கீழே தரப்பட்ட 1, 2, 3, 4, 5 என்பவற்றில் பொருந்துவதை தெரிந்து அதன் இலக்கத்தை இடுக.**

| | 1ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் |

| 1ம் கூற்று | | 2ம் கூற்று | |
|---|---|---|---|
| 36) | பாரசீகருக்கு எதிராக கிரேக்கரின் போர் வெலப்போனிசியப் போர் எனப்பட்டது. | குடியரசு அரசியல் பற்றி அரிஸ்ரோட்டில் எழுதிய நூலாகும். | (   ) |
| 37) | கி.பி 1763ல் கச்சாத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையால் ஏழாண்டுப் போர் முடிவிற்கு வந்தது. | வியன்னா மாநாட்டின் பின்னர் சர்வதேச சமாதானத்தை நோக்கமாகக் கொண்டு குறுகிய காலம் ஐரோப்பிய ஒற்றுமையை இம்மாநாட்டு முறை கொண்டது. | (   ) |
| 38) | 1ம் உலகப்போர் காலத்தில் இங்கிலாந்தில் வின்சன்சேர்ச்சில் பிரதமராக இருந்தார் | நாகசாகியில் அணுக்குண்டு போட்டதன் பின்னர் ஜப்பான் நிபந்தனையின்றி சரணடைந்து 2ம் உலகப்போர் முடிவுற்றது. | (   ) |
| 39) | பிரஞ்சுப் புரட்சியின் குழந்தையென நெப்போலியனை வர்ணித்துள்ளனர். | நெப்போலியன் பிரான்சின் சர்க்கரவர்த்தி யாவதற்கு பிரான்சியப் புரட்சி வழிவகுத்ததோடு அதனால் ஏற்பட்ட சாதனைகள் பலவற்றையும் முன்னெடுத்துச் சென்றான். | (   ) |
| 40) | வடஅத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் 1949ல் அமைக்கப்பட்டது. | பேர்லின் சுவர் உடைக்கப்பட்ட பின்பு கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் மீண்டும் இணைந்தன. | (   ) |

**(40 புள்ளிகள்)**

VadaZICTEC